மலாலா யூசுப்சாய் யார்?

ஆங்கிலத்தில்: தினா பிரவுன்
படங்கள்: ஆண்ட்ரூ தாம்சன்
தமிழில்: குமரேசன் முருகானந்தம்





மலாலா யூசுப்சாய் யார்?



ஆங்கிலத்தில்: தினா பிரவுன்

படங்கள்: ஆண்ட்ரூ தாம்சன்

தமிழில்: குமரேசன் முருகானந்தம்

உள்ளடக்கம்

மலாலா யூசுப்சாய் யார்?

மலாலா யூசுப்சாய் (mah-LAH-lah yoo-sahf-ZIGH) பாகிஸ்தானின் மிங்கோராவில் ஒரு சிறுமியாக இருந்தபோது, அவள் வளர்ந்து மருத்துவராக முடிவு செய்தாள். அவள் பல வருடங்கள் பள்ளிக்குச் சென்று மிகவும் கடினமாகப் படிக்க வேண்டும் என்று அவள் அறிந்திருந்தாள்.



ஆனால் மலாலா அதைப் பொருட்படுத்தவில்லை. அவள் பள்ளியில் எல்லாவற்றையும் விரும்பினாள். அவள் வாசிப்பை விரும்பினாள். வரலாறு மற்றும் புவியியல் மற்றும் அறிவியலை படிப்பதையும் அவள் நேசித்தாள், மதங்களைப் பற்றிப் படிப்பதையும் விரும்பினாள். தன் வகுப்புத் தோழிகளுக்கு கதைகள் எழுதுவதையும் சத்தமாகப் படித்துக்காட்டுவதையும் விரும்பினாள்.

அவளுடைய ஆசிரியர் புதிதாக ஒன்றைப் பற்றிப் பேசியபோது, அவள் மேலும் அறிந்துகொள்ள பொறுமை காக்கவில்லை. தேர்வுகள் கடினமாக இருந்தபோதிலும், குறிப்பாக அவள் கடினமாகப் படித்து பதில்களை அறிந்து கொண்ட பின் அவை சுவாரஸ்யமாகவும் இருந்தன, அவளுக்கு பத்து வயது இருக்கும் போது, அவளது வாழ்க்கையே மாறியது. அவள் வாசிந்த நகரமான **மிங்கோரா நகரில்** போர் வந்தது. தாலிபான் என்றழைக்கப்படும் வன்முறைப் போராளிகளின் குழு அவளது பிரியமான **ஸ்வாட்** பள்ளத்தாக்கைக் கைப்பற்றியது. பெண் பிள்ளைகள் பள்ளிக்கு செல்வது விரைவில் நிறுத்தப்படும் என்று கூறினர். அதாவது சிறுமிகள். சிறுவர்கள் அல்ல.



தாலிபான்கள் பெண்கள் பள்ளிகளை அழிக்கத் தொடங்கினர். அவர்களை தடுக்க பாகிஸ்தான் ராணுவம் வந்தது. மிங்கோரா மிகவும் ஆபத்தானதொரு போர் மண்டலமாக மாறியது, மக்கள் வெளியே செல்ல அஞ்சினார்கள்.

கற்க அனுமதிக்கப்படாவிட்டால், தான் எப்படி மருத்துவராக முடியும் என்று மலாலா யோசித்தாள்.

பள்ளியைத் திறக்க தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று அவள் விரும்பினாள்.



பலபள்ளிகள் மூடப்பட்டன, மேலும் சில மாணவர்கள் திறந்திருந்த பள்ளிகளுக்குச் செல்லத் துணிந்தனர்.

ஆனால் மலாலா தினந்தோறும் பள்ளிக்குச் சென்றாள்.

மலாலா வெளிப்படையாக பேசினாள். தலிபான்கள் தனது பள்ளியை மூடிவிடுவார்கள் என்று தான் பயப்படுவதாக உள்ளூர் செய்தித்தாள்களிடம் கூறினாள். வாழ்க்கை எவ்வளவு பயமுறுத்துவதாக மாறிவிட்டது என்பதைப் பற்றி அவள் பேசினாள். எல்லாவற்றிற்கும் மேலாக, பள்ளிக்குச் செல்ல விரும்புவதாக அவள் சொன்னாள்.

மலாலா பிரபலமானாள். மக்கள் அவளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தனர். சில தலிபான் போராளிகள் அவள் பெயரை அறிந்து பழிவாங்க முடிவு செய்தனர். அக்டோபர் 9, 2012 அன்று, அவர்களில் இருவர் அவரது பள்ளி பேருந்தை நிறுத்தினார்கள். ஒருவன் பின்பக்கமாகச் சென்று உள்ளே பார்த்தான். பின்னர் மலாலாவை சுட்டான்.

மலாலா யூசுப்சாய் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தாள். அவள் ஒரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாள், அங்கு அவள் குணமடைந்தாள்.

அவள் பேசுவதை நிறுத்தி விட்டாளா?

இல்லை.

அவள் உடல் நன்றாக தேறியதும், எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்ற உரிமைக்காக உழைத்தாள். ஆனால் அவள் படிப்பையும் கற்பதையும் பள்ளிக்கு செல்வதையும் நிறுத்தவே இல்லை.

ஜூலை 12, 2013 அன்று, நியூயார்க் நகரிலுள்ள ஐக்கிய நாட்டு சபையின் இளைஞர் மன்றத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நடுவே உரையாற்றினாள். "பல சிறுமிகளில் ஒருத்தியாக நான் இங்கே நிற் றேன்,," என்றாள் அவள். "நான் பேசுவது-எனக்காக அல்ல, மாறாக அனைத்து சிறுமிகள் மற்றும் சிறுவர்களுக்காக. நான் என் குரலை உயர்த்துகிறேன் – என்னால் கத்த முடியும் என்பதற்காக அல்ல, மாறாக குரலற்றவர்களின் குரலும் கேட்கப்பட வேண்டும் என்பதற்காக."



மலாலா யூசுப்சாய் ஒரு விஷயத்தை விரும்பினாள்- அது கல்வியாகும். அவள் பேசினாள், மக்கள் கவனித்தார்கள். உலகம் முழுவதும் கேட்டும் சிறிது சிறிதாக மாற்றங்கள் தொடங்கும் வரையிலும் பேசினாள்

அத்தியாயம் 1
ஒரு பெண் குழந்தை பிறந்தாள்

ஜூலை 12, 1997 இல், மலாலா யூசுஃப்சாய் பாகிஸ்தானின் மிங்கோரா நகரில் பிறந்தாள். அவளுடைய பெற்றோரின் படுக்கையறைக்கு வெளியே, ஒரு புதிய நாள் தொடங்கவிருந்தது. விரைவில் நகரம் ஹாரன் சத்தம் மற்றும் மக்கள் கூச்சலிடுதல் மற்றும் இசை இசைத்தல் ஆகியவற்றுடன் உயிர்ப்பிக்கும். ஆனால் இப்போது அது விடியற்காலை நேரம். நகருக்கு வெளியே மலைகளுக்குப் பின்னால் காலை சூரியன் உதித்துக்கொண்டிருந்தது. ஒரு சேவல் கூவியது. ஒரு ஸ்கூட்டரின் இன்ஜின் உறுமலோடு வேகமெடுத்தது.

அவர்கள் வாழ்ந்த ஏழ்மையான சுற்றுப்புறத்தில் உள்ள பல குடும்பங்களைப் போலவே, யூசுஃப்சாய் குடும்பத்தால் ஒரு மருத்துவர் அல்லது மருத்துவச்சியை அமர்த்திக்கொள்ள வசதியில்லை. அதற்கு பதிலாக பக்கத்து வீட்டு பெண் ஒருவர் பிரசவம் பார்க்க வந்தார். தூர் பேக்கே யூசுஃப்சாய் தனது முதல் குழந்தையை கையில் பெற்றதும் உடனடியாக குழந்தையின் மீது அன்பு கொண்டார். அதே நேரத்தில் அவர் மனதில் சோகமும் இருந்தது. ஏனென்றால் இந்த சிறுமிக்கு என்ன காத்திருக்கிறது என்பதை தூர் பேக்கே அறிந்திருந்தார்.

மிங்கோராவில் அவளுடைய நண்பர்களும் அண்டை வீட்டாரும்அப்பெண் குழந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட மாட்டார்கள். அதுவே ஒரு பையனாக இருந்திருந்தால், அவர்கள் பரிசுகளையும் உணவுகளையும் கொண்டுவந்து பாட்டும் பாடியிருந்திருப்பார்கள்.



தூர் பேக்கே ஒரு தொலைதூர மலை கிராமத்தில் வளர்ந்தாள். பெரும்பாலான சிறுமிகள் பள்ளிக்கு செல்லவில்லை. இருப்பினும், **தூர் பேக்கே** படிக்க விரும்பினாள். அவளுக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவள் கிராமத்துப் பள்ளிக்குச் சென்றாள், ஆனால் ஒரு பெண் பிள்ளையாக பள்ளியில் இருப்பது மிகவும் அசாதாரணமானது, அதனால் விரைவிலேயே அவள் பள்ளியிலிருந்து நின்றுவிட்டாள்.

மிங்கோரா மற்றும் ஸ்வாட் பள்ளத்தாக்கின் பல பகுதிகளில், எல்லா குழந்தைகளும் பள்ளிக்குச் செல்வது வழக்கமான ஒன்று.

முதல் பெண்கள் பள்ளி 1920களில் கட்டப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் தொடர்ந்தன. சிறுவர்கள், பெண்கள் மற்றும் ஆண் குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் நம்பினர். **ஸ்வாட்** பகுதியின் பட்டதாரிகள், ஆசிரியர்களாகவும், மருத்துவர்ககளாகவும் மேலும் பிற தொழில் வல்லுநர்களாகவும் விளங்கியதைப் பற்றி **பாகிஸ்தான்** பெருமிதம் கொண்டது.

மலாலாவின் தந்தையும் ஒரு மலை கிராமத்தில் வளர்ந்தவர். பெண்கள் கல்வி கற்க வேண்டுமெறு நம்பினார். **ஜியாவுதீன்** (zee-OW-dun) தனது புதிய பெண் குழந்தையைப் பார்த்து ஏமாற்றமடையவில்லை மாறாக பெருமையாக உணர்ந்தார். எந்தவொரு பையனுக்கும் கிடைக்கிற அதே வாய்ப்புகள் அவளுக்கும் வாழ்வில் கிடைப்பதை அவர் உறுதி செய்தார்.





மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அவர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனியார் தொடக்கப் பள்ளியைக் கட்டினார். அவர் அதை ***குஷால்*** பள்ளி என்று அழைத்தார். அவர் ஆசிரியராக இருந்தார். **மிங்கோரா**வில் ஒவ்வொரு குழந்தைக்கும் கற்க இடம் கிடைக்கும் வரை, பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி, ஆண்களுக்கு இன்னொன்று, என்று மென்மேலும் பல பள்ளிகளை கட்ட **ஜியாவுதீன்** திட்டமிட்டார்.

ஜியாவுதீன் மத நம்பிக்கையுடைய ஒருமுஸ்லீம் குடும்பத்தில் வளர்ந்தவர். அவரது தந்தை ஒரு ஆசிரியர். குழந்தைகள் புனிதமானவர்கள், எல்லா குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்று **ஜியாவுதீனுக்கு** அவர் கற்றுக் கொடுத்தார். மற்றவர்களுக்கு உதவுவது முக்கியம் என்று விளக்கினார். **ஜியாவுதீன்** கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

இ ஸ் லா ம்



இஸ்லாம் உலகெங்கிலும் உள்ள ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களால் கடைப்பிடிக்கப்படும் ஒரு அமைதியான மதம். முஸ்லிம்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்கள். கடவுள் ஒருவரே, அரபு மொழியில் அவர் **அல்லா** என்று அறியப்படுகிறார் என்று இஸ்லாம் போதிக்கிறது. **அல்லா**வின் போதனைகள் **குர்ஆன்** என்று அழைக்கப்படும் இஸ்லாத்தின் புனித நூலில் உணர்த்தப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்கள் **மசூதி**கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஜியாவுதீன் அவரது வயதுக்கேற்ற வளர்ச்சியின்றி சிறியவராகவும் மற்ற குழந்தைகளை விட நிறம் குறைந்தவராகவும் இருந்தார். வகுப்பில் பேச முற்பட்டபோது அவர் திணறினார். சில நேரங்களில் சக மாணவர்கள் அவருக்குத் தொல்லை கொடுத்தனர் அல்லது புறக்கணித்தனர். சில நேரங்களில் அவர் ஒரு அயலவர் போல் உணர்ந்தார்.


பலர் அவரை ஆபத்தான குழுக்களில் சேர்த்துவிட முயன்றனர். அவர் ஒரு குறிப்பிட்ட வழியில் சிந்திக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அவர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக படித்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் சொந்தமாக முடிவெடுப்பது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொண்டார், அவர் வளர்ந்ததும், பள்ளிதான் தன்னைக் காப்பாற்றியது என்பதை உணர்ந்தார்.

மலாலா பிறந்ததும், **ஜியாவுதீன்** தனது புதிய மகளைப் பார்த்து அவளுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தார். இந்த குழந்தைக்கு கட்டாயம் வலிமையான, சுதந்திரமான பெண் என்பதைக் குறிக்கும் ஒரு பெயரை வைக்க வேண்டும். **ஜியாவுதீன்** அவரது வம்சாவழியை ஆராய்ந்தார். அது முந்நூறு ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றது. ஆனால், ஒரு பெண்ணின் பெயர் கூட அப்பட்டியலில் அவரால் காண முடியவில்லை. ஆனால் அவரது **பஷ்டூன்** கலாச்சாரத்தில், பல நாயகிகள் இருந்தனர், தேர்வு செய்ய பல பெயர்கள் இருந்தன. இறுதியில், தனது நாட்டை மிகவும் நேசித்த **மைவாண்டின் மலாலை** என்ற துணிச்சலான இளம் பெண்ணின் பெயரையே தனது குழந்தைக்கு பெயராக வைத்திட அவர் முடிவு செய்தார்.

பஷ்தூன் மக்கள்

ஆப்கானிஸ்தான் நாட்டிலும் **பாகிஸ்தானின்** வடமேற்கு எல்லையிலும் **பஷ்தூன்** மக்கள் வாழ்கின்றனர். பலர் மலைகளில் வாழ்வதோடு முரட்டுத்தனமான வாழ்க்கை முறைக்கு பழகிவிட்டார்கள்.
வரலாறு முழுவதும், **பஷ்தூன்** மக்கள் பல எதிரிகளை எதிர்த்துப் போராடி வருகின்றனர். **பஷ்தூன்** மக்கள் பெருமைக்குரியவர்கள். அவர்கள் தங்கள் பாரம்பரியத்தை இழக்க விரும்பவில்லை. அவர்கள் மற்றவர்களுக்கு மரியாதை மற்றும் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்வதில் நம்பிக்கை வைக்கிறார்கள். அவர்கள் குடும்பம், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரின் விசுவாசத்தை மதிக்கிறார்கள். ஏறக்குறைய அனைத்து **பஷ்தூன்** மக்களும் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்கள்.





அவர் தனது பேனாவை எடுத்து தனது புதிய மகளின் பெயரை **மலாலா** என்று எழுதினார்:

மைவாண்டின் மலாலை



ஒரு காலத்தில் **மலாலை** என்றொரு பெண் இருந்தாள். **பாகிஸ்தானிற்கு** அருகே **ஆப்கானிஸ்தானில்** உள்ள ஒரு சிறிய நகரத்தில் அவள் வசித்து வந்தாள். **மலாலை** கால்நடை மேய்ப்பர் ஒருவரின் மகள். 1880இல், ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்ற முயன்றனர். அவர்களைத் தடுக்க பல உள்ளூர் இளைஞர்களும் ஆண்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். **மலாலை**யின் தந்தையும் அவளுடைய கணவனும் கூட சண்டையிட்டனர். **மலாலை**யின் வீட்டிற்கு அருகில் **மைவாண்டில்** போர் நடந்தது. காயமடைந்த **ஆப்கானிஸ்தான்** ராணுவ வீரர்களுக்கு **மலாலை** உதவி செய்தாள். **மலாலை** வீரர்களுக்காக கவலை கொண்டாள். போராடுவதை அவர்கள் கைவிடுவதை அவள் விரும்பவில்லை. எனவே, அவள் தனது முக்காடைக் கழற்றி சுழற்றியபடி பாட ஆரம்பித்தாள்.

தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக சிந்திய,
என் காதலனின் ஒரு துளி இரத்தத்தைக் கொண்டு
என் நெற்றியில் அழகானதொரு பொட்டு வைப்பேன்,
அது தோட்டத்து ரோஜா மலரை
வெட்கப்பட வைப்பது போன்றிருக்கும்.

.**ஆப்கானிஸ்தான்** வீரர்கள் அவள் பாடலைக் கேட்டனர். அவர்கள் உற்சாகத்துடன் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றனர். ஆனால் அந்த போரின் போது **மலாலை** சுட்டுக் கொல்லப்பட்டார். போராட்டத்தின் தன்மையை ஆங்கிலேயர்களுக்கு எதிராக திருப்பி அவர்களைத் தடுத்து நிறுத்த உதவிய பெண் அவள். **மலாலை** மைவாண்டின் **நாயகி**.

அத்தியாயம் 2
சிறகுகளுடன் பிறந்தவள்



மலாலாவுக்கு இரண்டு வயது இருக்கும் போது, அவளது சகோதரன் **குஷால்** பிறந்தான். அக்கம்பக்கத்தினர் பரிசுகளையும் உணவையும் மகிழ்ச்சியுடன் கொண்டு வந்தனர். இந்த ஆண் குழந்தையின் எதிர்காலம் சாத்தியங்கள் நிறைந்தது, என்று அவர்கள் கொண்டாடியபடி சொன்னார்கள். அவன் ஒரு பல்கலைக்கழகத்திற்கு கூட செல்லலாம். ஒருவேளை அவன் ஒரு டாக்டராகவோ அல்லது அவனது தந்தையைப் போல ஆசிரியராகவோ ஆகலாம்.

மலாலா கேட்டுக் கொண்டிருப்பது **ஜியாவுதீனுக்குத்** தெரியும். அவர் ஒரு கண்ணியமான மனிதர். **மிங்கோராவில்** தான் கட்டும் பள்ளிகள் ஆண் மற்றும் பெண்களுக்குமானது என்று சுட்டிக்காட்டி தனது விருந்தினர்களை புண்படுத்த விரும்பவில்லை. **குஷாலும் மலாலா**வும் பல்கலைக்கழகத்திற்குச் சென்று மருத்துவராகலாம்.
மலாலா தனது தந்தை பள்ளியின் வகுப்பறையை நேசித்தார். அவள் சிறுமியாக இருந்தபோது, சில சமயங்களில், காலியான வகுப்பறையில் நின்று,
தான் ஒரு ஆசிரியை போல நடந்து கொண்டாள்.



மலாலா வளர வளர, சமையல் செய்வதில் தன் அம்மாக்கு உதவுவதில் மகிழ்சசி ஆடைந்தாள். குடும்பம் பள்ளிக்கு அருகிலிருந்த அவர்களின் இடுக்கான சின்னஞ்சிறிய அறைகள் கொண்ட வீட்டிலிருந்து மாறிச் சென்றபோது, அவரது புதிய வீட்டின் தோட்டத்தில் அம்மாவுக்கு உதவ அவள் ஆர்வம் காட்டினாள்.

இப்போது அதிக இடம் இருந்தது. பெரும்பாலான மாலை நேரங்களில், பக்கத்து வீட்டுக்காரர்கள் தாழ்வாரத்தில் கூடி, **மலாலா** அவளது அம்மாவின் சமையலுக்கு உதவி சமைத்த உணவைச் சாப்பிட்டார்கள்.





சில நேரங்களில் அவள் அப்பெண்களுடனிருந்தாள். அவர்கள் அன்று நடந்த விசயங்களைப் பற்றிப் பேசினார்கள் மற்றும் அந்த அழகான **ஸ்வாட்** பள்ளத்தாக்கில் ஏரிகள் மற்றும் மேய்ச்சல் நிலங்களுக்கு அப்பால் உயர்ந்து நிற்கும் மலைகளில் சூரியன் மறைவதைப் பார்த்து ரசித்தார்கள்.

"ஆனால் அவர் என் சிறகுகளை வெட்டவில்லை. அவர் என்னை பறக்க அனுமதித்தார். எனது இலக்குகளை அடைய அவர் என்னை அனுமதித்தார்." என்றாள் அவள்.





ஆனால் பெரும்பாலும், அவள் தந்தையின் நண்பர்கள் போன்ற ஆண்கள் பேசுவதை கவனிக்க அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். அவர்கள் விவரங்களை பரிமாறிக் கொள்வதையும் அரசியல் பேசுவதையும் அவள் விரும்பினாள். பெரும்பாலும், அவரது தந்தை கவிதைகளை வாசித்தார் அல்லது அவளது பெயருக்கு காரணமான ***மலாலை*** போன்ற ஹீரோக்களைப் பற்றி பேசினார். சில சமயங்களில் அவர் தனக்குப் பிடித்த கவிஞரான ரூமியின் கவிதைகளை வாசித்தார்.

ரூமியின் கவிதைகள்



மலாலா, மிகச்சிறந்த கவிஞரான ரூமியின் கவிதைகளைக் கேட்டு வளர்ந்தாள். ரூமி செப்டம்பர் 30, 1207 அன்று ஆப்கானிஸ்தான் நாட்டில் பிறந்தவர். வாழ்க்கையில் மிக முக்கியமானது என்று அவர் கருதியவற்றைப் பற்றி அவர் பேசவும் எழுதவும் செய்தார். இதோ அவருடைய கூறிய வாசகங்களில் சில:

உங்களுக்கு அச்சத்தையும் சோகத்தையும் தருபவற்றைப் புறக்கணிக்கவும்.

பறவைகள் பாடுவது போல் நான் பாட விரும்புகிறேன், யார் கேட்கிறார்கள் அல்லது அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நான் கவலைப்படுவதில்லை.

மற்றவர்களுடைய சாதனைகளில் திருப்தி அடைய வேண்டாம், உங்கள் சொந்த சாதனைகள் வெளிப்படட்டும்.

ஒருவரின் ஆன்மா செம்மையடைய ஒரு விளக்கு, அல்லது ஒரு உயிர்காக்கும் படகு, அல்லது ஒரு ஏணியாக இருந்து உதவுங்கள். ஒரு மேய்ப்பனைப் போல உங்கள் வீட்டை விட்டு வெளியேறுங்கள். ।

உங்களுக்குள் உங்களுக்குத் தெரியாத ஒரு கலைஞன் இருக்கிறான்.

அத்தியாயம் 3
மிங்கோரா வீட்டில்

மலாலாவின் இரண்டாவது சகோதரன் **அட்டல்** பிறந்த நேரத்தில், **ஜியாவுதீனின்** ஆண்கள் மற்றும் ஒரு பெண்கள் தொடக்கப் பள்ளி, ஒரு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளில் எண்ணூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தனர்.

புதிய குழந்தை பிறந்தபோது **மலாலா**வுக்கு ஏழு வயது மேலும் **குஷலு**க்கு கிட்டத்தட்ட ஐந்து வயது.

பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலான குடும்பங்களைப் போலவே, குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக உட்க்கார்ந்து சாப்பிட்டனர். காலை உணவு மிக முன்னதாகவே வழங்கப்பட்டது. ஆண்களும் சிறுவர்களும் தொழுகைக்காக அருகில் உள்ள வழிபாட்டுத் தலமான மசூதிக்குச் சென்றனர். பெண்களும் சிறுமிகயரும் வீட்டிலேயே தொழுகை செய்தனர்.





அவரது தந்தையின் பள்ளியில், **மலாலா** பல பாடங்ளைப் பயின்றாள், அவள் **பாஷ்டோ, ஆங்கிலம்** மற்றும் பாகிஸ்தானின் அதிகாரப்பூர்வ மொழியான **உருது** ஆகிய மூன்று மொழிகளைப் படித்ததோடு, அவள் **கணிதம், அறிவியல், வரலாறு** மற்றும் **இஸ்லாமிய மதம்** சார்ந்த பாடங்களையும் கற்றாள்.

அவளது தாயார், **தோர் பெகாய்,** கற்பதில் ஆர்வம் காட்டினார். அவருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது, ஆனால் அவர், அன்று தன் மகள் பள்ளியில் கற்றுக்கொண்டதைப் பற்றி பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தார்.



தனது வகுப்பில் படிக்கும் பெரும்பாலான குழந்தைகளைப் போலவே, மலாலாவும் வீட்டில் பாஷ்டோ மொழியில் பேசினாள். பள்ளியில், ஆசிரியர்கள் ஆங்கிலம் மற்றும் உருதுவில் கற்பித்தார்கள். விரைவில் மலாலாவால் மூன்று மொழிகளையும் பேசவும் புரிந்துகொள்ளவும் முடிந்தது.

சில குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஜியாவுதீனின் குறைந்த கட்டண தனியார் பள்ளிகளில் சேர மாதத்திற்கு சில டாலர்கள் கொடுத்தனர் மற்ற குழந்தைகளால் கட்டணம் எதையும் செலுத்த முடியவில்லை, ஆனால் எப்படி இருந்தாலும் அவளுடைய தந்தை அவர்களை பள்ளியில் சேர்த்துக்கொண்டார்



ஜியாவுதீன் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் இப்போது கொஞ்சம் பணம் இருந்தது. குறுந்தகடுகள் மற்றும் புத்தகங்களை வாங்கினர். மலாலா வாசிக்க விரும்பினாள்,

ட்விலைட் தொடரை வாசித்து முடித்த பிறகு, காட்டேரி போலிருப்பது வேடிக்கையாக இருக்கும் என்று அவள் நினைத்தாள்!



யூசுப்சாய் குடும்பம் ஒரு டிவியையும் வாங்கினார்கள். சில சமயங்களில் பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தின் நிகழ்ச்சிகளைப் பார்த்தார்கள். எப்போதாவது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற தொலைதூர நாடுகளில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்தனர். ஒரு பத்திரிகையில் பணிபுரியும் ஒரு பெண்ணைப் பற்றிய ***அக்லி பெட்டி*** என்ற நிகழ்ச்சி மலாலாவிரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்..

வெவ்வேறு இடங்களிலுள்ள மக்கள் வித்தியாசமாகப் பேசுவதையும், உடை அணிவதையும், நடந்து கொள்வதையும் மலாலா கவனிக்க ஆரம்பித்தாள்.

மக்கள் வித்தியாசமாகத் தோன்றலாம், ஆனால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதுதான் முக்கியம் என்று அவரது பெற்றோர் விளக்கினர். மலாலா அம்மாவுடன் சந்தைக்கு செல்வதை விரும்பினாள். பார்ப்பதற்கு பலவிதமான கடைகள் இருந்தன. அவள் சிறிய பொம்மைகள், இனிப்பு வகைகள் மற்றும் பளபளப்பான வளையல்களை வாங்கினாள். வண்ணமயமான முக்காடுகளையும் புதிய ***டிவிடி***களையும் ஆராய்ந்தாள்.

செருப்பு தைப்பவர் காலணிகள் செய்வதைப் பார்த்தபடி இருந்தாள். பழங்கள் மற்றும் காய்கறிகளை எடுக்க அம்மாவுக்கு உதவினாள்





அவள் வளர வளர, பெண்களுடன் அதிக நேரத்தையும் ஆண்களுடன் குறைந்த நேரத்தையும் செலவிட ஆரம்பித்தாள். ஆனால் அடிக்கடி, அவள் ஆண்களுக்கு தேநீர் பரிமாறினாள், அவர்கள் பேசுவதைக் கேட்க நின்றவரிருந்தாள். அவளுக்கு எட்டு, ஒன்பது வயதான போது , அங்கு கவிதையை விட அரசியல் பற்றி அதிகம் பேசப்படுவதாகத் தோன்றியது, மென்மேலும் அதை கேட்க அவள் அதில் ஆர்வம் கொண்டவளானாள்.

அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் நடந்த போரை ஒருவர் குறிப்பிட்டார். அதிகாரத்தில் உள்ள ஒரு கொடூரமான மற்றும் வன்முறைக் குழுவான - தலிபான்- பெண்களை கடுமையான சட்டங்களுக்குக் கீழ்ப்படியச் செய்தது. பெண்களும் சிறுமிகளும் ஓர் ஆண் உடன் இல்லாவிட்டால் வீட்டை விட்டு வெளியே வர முடியாது. மேலும் அந்த ஆண் உறவினராக இருக்க வேண்டும். பெண்கள் வீட்டிற்கு வெளியே வேலை செய்ய முடியவில்லை. சிறுமிகள் பள்ளிக்கு செல்ல முடியவில்லை, தலிபான் சட்டங்களை மீறிய பல பெண்கள் மோசமாக தாக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.



மிங்கோராவில் உள்ள அனைத்து சிறுமிகளையும் பள்ளிக்கு செல்ல விடாமல் தடுப்பது பற்றி பேசிக்கொண்டிருந்தார் என்று உள்ளூர் வானொலி நிலையத்தில் ஒருவர் வேறுஒருவரைப் பற்றி குறிப்பிட்டார்.

மலாலாவால் நம்பவே முடியவில்லை. சிறுமிகள் பள்ளிக்கு செல்லக்கூடாது என்று எப்படி சொல்ல முடியும்? அவளது சகோதரன் **குஷால்** போலல்லாமல், அவள் வீட்டுப்பாடம் மற்றும் கட்டுரைகள் எழுதுதல் மற்றும் தேர்வுகளுக்குப் படிப்பதில் மகிழ்சசியுற்றாள்.

அதிக மதிப்பெண்கள் பெற்றதற்காகவோ தனது வகுப்பில் சிறந்தவளாக இருந்ததற்காகவோ அவள் பல பரிசுகளை வென்றாள். அவளது தந்தை தனது மாணவர்கள் படிப்பதற்காகக் வாங்கிவந்த பள்ளி பாடப் புத்தகங்கள் அனைத்தையும் அவள் விரும்பினாள். அவள் வகுப்பில் மாணவர்கள் முன் பேசுவதையும் தினமும் தன் நண்பர்களைப் பார்ப்பதையும் விரும்பினாள். அவளுடைய தோழி **மோனிபா**, எல்லாவற்றிற்கும் மேலாக, **மோனிபா**வும் புத்திசாலி. அவளுக்கும் **மலாலா**வுக்கும் அடிக்கடி அற்ப சண்டை சச்சரவுகள் ஏற்படும். ஆனால் அவர்கள் சிறந்த நண்பர்கள் அல்ல என்று அர்த்தம் இல்லை. பள்ளிக்குச் செல்ல முடியாவிட்டால் தன்

அத்தியாயம் 4
ஆபத்தான காலக்கட்டங்கள்

மலாலா மிகச் சிறியவளாக இருந்தபோது, **ஸ்வாட்** பள்ளத்தாக்கில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இருந்தனர். சிலர் கோடைகால இசை மற்று நடன விழாக்களுக்கு வந்தனர். மற்றவர்கள் **ஸ்வாட்** ஆற்றங்கரையில் அமர்ந்தனர் அல்லது மலைகள் மீது ஏறினர். பெரும்பாலும், அவர்கள் **ஸ்வாட்**டில் உள்ள மக்களைப் போல உடை அணியவில்லை. உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள பெண்களும் சிறுமிகளும் வெவ்வேறு பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள் என்பதை மலாலா அறிந்திருந்தாள்.

ஸ்வாட் பகுதி பாகிஸ்தானின் சில இடங்களைப் போல நவீனமானதல்ல என்பதும் மலாலாவுக்கு தெரியும். தோ;தொலைக்காட்சியில் அவள் பார்த்த ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் பெண்களைப் போல உடை அணிந்த பெண்கள் இஸ்லாமாபாத்தின் பெரிய நகரத்தில் இருந்தனர்.

மிங்கோராவில் உள்ள பெரும்பாலான பெண்களும் சிறுமிகளும் அப்படி ஆடை அணிவதில்லை. அவர்கள் வெளியே செல்லும் போது தங்கள் உடல்களை முக்காடு அல்லது ஆடைகளால் போர்த்திக் கொண்டிருந்தனர்.





அவர்கள் தலையில் முக்காடு அணிந்திருந்தனர். அவரது தாயின் மலை கிராமத்தில், பெண்கள் பெரும்பாலும் இன்னும் பாரம்பரியமான முறையில் ஆடை அணிவார்கள்.

அவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போதெல்லாம் புர்கா எனப்படும் ஆடையை தேர்ந்தெடுத்து அணிந்தனர்.

புர்கா அவர்களின் முழு உடலையும் முகத்தையும் மறைத்து, அவர்கள் பார்க்கும் வகையில் ஒரு கட்அவுட் கொண்டு மூடியிருந்தது.

2007ல் மலாலாவுக்கு பத்து வயது. இந்த நேரத்தில், தலிபான் உறுப்பினர்கள் **ஸ்வாட்** பள்ளத்தாக்கைக் கைப்பற்றினர். பெண்கள் அனைவரும் பர்தா அணிய வேண்டும் என்று கூறினார்கள். தலிபான்கள் அனைத்து பெண்களிடமிருந்தும் சுதந்திரத்தை பறிக்க நினைத்தனர். ஒரு வானொலி நிலையத்தில், தலிபான் நபர் ஒருவர் அச்சுறுத்தும் விஷயங்களை உரத்து பேசிக் கொண்டிருந்தான்.

புர்காஸ் அணிவதைத் தவிர, **மிங்கோரா**வில் உள்ள சிறுமிகள் மற்றும் பெண்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும் அவர்கள் ஒரு ஆண் உறவினர் துணையுடன் மட்டுமே வெளியே செல்ல முடியும். இந்த விதிகளை பின்பற்றாத பெண்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அவன் அறிவித்தான். அவர்களால் தனியாக சந்தைக்கு செல்ல முடியவில்லை.



அவை மட்டும்தானா?
இல்லை!
பெண்கள் வாக்களிக்க முடியாது. அவர்களால் வேலையில் இருக்க முடியாது. இனி பெண் டாக்டர்கள் இருக்க மாட்டார்கள், பெண்கள் ஆண் மருத்துவர்களிடம் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள், மருத்துவமனைகளுக்கு செல்ல முடியாது. இதனால் நோய்வாய்ப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை அளிக்க வழி இல்லை. இசை மற்றும் நடனம் தடைசெய்யப்பட்டது. அனைத்து தொலைக்காட்சிகள் மற்று குறுந்தகடுகள் மற்றும் கணினிகள் எரிக்கப்படும். மத புத்தகங்களை மட்டுமே படிக்க முடிந்தது. பெண்கள் பள்ளிகள் மூடப்படாவிட்டால் அழிக்கப்படும்.



பெண்களுக்கு தொடர்ந்து பாடம் நடத்தும் ஆசிரியர்களும் முதல்வர்களும் தண்டிக்கப்படுவார்கள்.
நல்ல முஸ்லீம்கள் பெண்களை பள்ளிக்கு செல்ல அனுமதிக்க மாட்டார்கள் என்று அந்த மனிதன் சொல்லிக்கொண்டிருந்தான். அது உண்மையல்ல என்று **மலாலா**வுக்குத் தெரியும். அவளது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தவர்கள் அனைவரும் நல்ல முஸ்லிம்கள். அவர்கள் ஆழ்ந்த மத நம்பிக்கை கொண்டிருந்தனர். தினமும் பிரார்த்தனை செய்தார்கள். ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்க வேண்டும் என்றும் அவர்கள் நம்பினர். **மலாலா** தனது சமயம் சார்ந்த பள்ளியில், முஸ்லிம்கள் அமைதி மற்றும் மற்றவர்களிடம் கருணை காட்டுவதில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதை கற்றறிந்து கொண்டாள்.
ஒரு நாள் மாலை ஒருவன் **மலாலா**வின் வீட்டிற்கு வந்து **ஜியாவுதீனிடம்** அவரது பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மூடச் சொன்னான். மலாலாவின் தந்தை மறுத்துவிட்டார். மலாலா பயந்தாள். அவள் தந்தைக்கு ஏதாவது நேர்ந்தால்? மற்ற பள்ளிகள் அழிக்கப்பட்டன. தலிபான்கள் வீடுகளுக்குள் புகுந்தனர். அவர்கள் "சட்டவிரோத" புத்தகங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர்கள் டிவி மற்றும் வீடியோ கேம்களை அழித்து வந்தனர். திரையரங்குகள் மற்றும் மக்கள் இசை கேட்க மற்றும் நடனம் காணச் சென்ற இடங்களை மூடினர்.



துப்பாக்கி ஏந்திய மனிதர்கள் - தலிபான் உறுப்பினர்கள் - எல்லா இடங்களிலும் இருந்தனர். மக்கள் வெளியில் செல்ல அச்சப்பட்டனர். ஜியாவுதீன் தனது பள்ளிகளைத் திறந்து வைத்திருந்தார், ஆனால் பல மாணவர்கள் தலிபான்களுக்கு பயந்து வீட்டிலேயே இருந்தனர்.

2007 ஆம் ஆண்டின் இறுதியில், தலிபான்களைத் தடுக்க பாகிஸ்தான் இராணுவம் வந்தது. மிங்கோரா மற்றும் ஸ்வாட் பள்ளத்தாக்கின் பெரும்பகுதி போர்க்களமாக மாறியது. இரவும் பகலும் குண்டுவெடிப்பு நடந்தது. பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகளில் தங்கினர். ஆனால் சில குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்குச் சென்றனர். அவர்களில் மலாலாவும் ஒருவர்.

பெண் டாக்டர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதுகாப்பான இடங்களில் வேலை தேடி அப்பகுதியை விட்டு வெளியேறினர். பெண்கள் சந்தையில் இல்லை, ஆண்கள் பயந்தார்கள், அதனால் பல கடைகள் மூடப்பட்டன. ஆண்கள் ஷேவ் செய்ய அனுமதிக்கப்படவில்லை. முடிதிருத்தும் கடைகளும் மூடப்பட்டன.



2008-ம் ஆண்டு பாகிஸ்தான் ராணுவ வீரர்களுக்கும் தலிபான்களுக்கும் இடையே சண்டை நீடித்தது. பல மாதங்களுக்குப் பிறகு, ராணுவம் வெற்றி பெறுவது போல் தோன்றியது. தலிபான்கள் இறுதியாக போய்விட்டனர் என்றும் விரைவிலேயே வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பும். என்று அனைவரும் நம்பினர்.

பாகிஸ்தான் ராணுவம் **ஸ்வாட்** பள்ளத்தாக்கிலிருந்து வெளியேறியது. ஆனால் தலிபான்கள் அங்கிருந்து செல்லவில்லை. ரேடியோ மிரட்டல்கள் மீண்டும் ஆரம்பித்தன. உத்தரவை பின்பற்றாதவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். கடைகள் எரிக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டின் இறுதியில், **மிங்கோரா**வில் 150 க்கும் மேற்பட்ட பெண்கள் பள்ளிகள் அழிக்கப்பட்டன.



மலாலா தனது பள்ளி ஆபத்தில் இருப்பதை உணர்ந்தாள். அவள் அதிர்ஷ்டசாலி என்பதும் தெரிந்தது. அவளுடைய பள்ளி மூடப்பட்டால், அவளுடைய தந்தை அவளுக்கு தொடர்ந்து கற்பிப்பார். அவள் படிக்க கணிதம் மற்றும் அறிவியல் மற்றும் இலக்கிய புத்தகங்கள் அவளுக்கு கிடைக்கும். ஆனால் மிங்கோராவில் உள்ள பெரும்பாலான சிறுமிகள் அவளைப் போல் அதிர்ஷ்டசாலிகள் அல்ல, அவர்களுக்கு என்ன நடக்கும்?

அத்தியாயம் 5
ஒரு ரகசிய நாட்குறிப்பு (டைரி)

டிசம்பரில், மலாலாவின் மிக மோசமான அச்சம் உண்மையாகிவிட்டது. தலிபான்களிடமிருந்து ஒரு உத்தரவு வந்தது: குளிர்கால விடுமுறைக்குப் பிறகு மிங்கோராவில் பெண்கள் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படாது. தலிபான்கள் மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்லலாம், ஆனால் மாணவிகள் மறுபடி பள்ளிக்குச் செல்ல முடியாது, மலாலாவும் அவளது தோழிகளும் பேரதிர்ச்சியக்கு ஆளாகினர். இது உண்மையாக இருக்க முடியுமா? பள்ளிக்கூடம் செல்ல முடியாவிட்டால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கக் கூடும்?



ஒரு நாள் பாகிஸ்தானில் பிபிசி நிருபர் ஒருவர் ஜியாவுதீனிடம் உதவி கேட்டார். பிபிசி உருது இணையதளம் மிங்கோராவில் பள்ளி மூடப்படுவதைப் பற்றி எழுத ஆசிரியரைத் தேடிக்கொண்டிருந்தது. ஜியாவுதீன் சில ஆசிரியர்களிடம் பேசினார், ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். அவர்கள் தலிபான்களுக்கு பயந்தனர். அவர்களின் நகரத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி எழுதுவது மிகவும் ஆபத்தானது.

மலாலா முன்பு வெளிப்படையாக பேசியிருந்தாள், அவள் அதில் மகிழ்சசி ஆடைந்தாள். செப்டம்பர் 2008 இல், உள்ளூர் கிளப்பில் செய்தியாளர்களுக்காக ஒரு உரையை நிகழ்த்தினாள். அவளது உரையின் தலைப்பு "எனது அடிப்படை கல்வி உரிமையை பறிக்க தலிபான்களுக்கு எவ்வளவு தைரியம்?" பாகிஸ்தான் முழுவதும் உள்ள செய்தித்தாள்கள் அவளது பேச்சுக்களை அச்சிட்டன. அவள் எவ்வளவு வலுவாக உணர்ந்தாள் என்பதை மக்களுக்குச் சொல்வதில் அவள் மகிழ்ச்சியடைந்தாள். அவள் தான் நம்பியதைப் பேசினாள், மோசமான விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை.



பிபிசிக்கு வலைப்பதிவு எழுத அவரது மகள் சரியான நபராக இருக்கலாம் என்று **ஜியாவுதீன்** நினைத்தார், அவர் மலாலாவிடம் கேட்டார். அவளுக்கு வயது பதினொன்றுதான். பத்திரிகைகளில் எழுதுவது பற்றி அவளுக்கு அதிகம் தெரியாது, ஆனால் அவள் அதை முயற்சிக்கத் தயாராக இருந்தாள்.





பிபிசி என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் பிராப்காஸ்டிங் கார்ப்பரேஷன், இங்கிலாந்தில் உள்ள லண்டனில் இருக்கிறது. பிபிசி அமெரிக்கா உட்பட உலகம் முழுவதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் வெப்காஸ்ட்களை இது ஒளிபரப்புகிறது. பிபிசியின் நிருபர்கள், அனைத்து நாடுகளிலிருந்தும் பல்வேறு மொழிகளில் செய்திகளை வெளியிடுகின்றனர். ஒரு பாகிஸ்தான் பள்ளி மாணவியின் நாட்குறிப்பு, என்ற மலாலாவின் வலைப்பதிவு, முதலில் பிபிசி உருது இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

மலாலாவின் பெற்றோர் **பிபிசி**யிலிருந்து வந்த அந்த நபரிடம் பேசினர். **மலாலா** சிறப்பாக செயல்படுவார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருந்தன. வலைப்பதிவு எழுதினால் தன் தந்தைக்கு ஏதாவது தீங்கு வந்துவிடுமோ என்று **மலாலா** கவலைப்பட்டாள். **பிபிசி**யில் இருந்து வந்தவர் **ஜியாவுதீனைப்** பற்றியும் கவலைப்பட்டார். **மலாலா**வைப் பற்றியும் கவலைப்பட்டார். **ஜியாவுதீன் மலாலா**வைப் பற்றி கவலைப்படவில்லை. ஒரு குழந்தையை யாரும் காயப்படுத்த மாட்டார்கள், என்று அவர் நினைத்தார். அது சாத்தியமற்றதாகத் தோன்றியது. அப்படி ஒரு கேள்விக்கே இடமில்லை, என்று அவர் நினைத்தார். பிபிசியிலிருந்து வந்தவர் **மலாலா** மற்றும் அவரது பெற்றோருடன் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தினார். இறுதியாக, **மலாலா** ஒருபந்தனையின் கீழ் வலைப்பதிவை எழுதுவாள் என்று முடிவானது. அது அவள் ஒரு புனைப்பெயரைப் பயன்படுத்தி எழுதுவாள் என்பதாகும்.

மலாலாவின் வலைப்பதிவு பாகிஸ்தான் பள்ளி மாணவியின் டைரி என்று அழைக்கப்பட்டது. அவள் **குல் மகாய்** என்ற பெயரைப் பயன்படுத்தினாள். இது ஒரு பிரபலமான பஷ்டூன் நாட்டுப்புறக் கதையில் வரும் வலிமையான பெண்ணின் பெயராகும். **மலாலா** குறிப்புகளை எழுதி, செய்தியாளரிடம் தினமும் தொலைபேசியில் வாசிப்பாள்.

அவளும் அவளுடைய தோழிகளும் எப்படி உணர்கிறார்கள், வீட்டிலும் பள்ளியிலும் என்ன நடக்கிறது என்று அவரிடம் கூறுவார். நிருபர் அவளது வார்த்தைகளை இணையதளத்தில் பதிவேற்றுவார்.



பிபிசி இணையதளம் ஜனவரி 3, 2009 அன்று ஒரு *பாகிஸ்தானிய பள்ளி மாணவியின் டைரி* என்ற கட்டுரையை உருது மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடத் தொடங்கியது. பிற வலைப்பதிவு இடுகைகள் தொடர்ந்து வந்தன. மலாலாவின் வார்த்தைகள் பள்ளிக்குத் தயாராகி, அவளுடைய தேர்வுகளுக்காகப் படிப்பதைப் பற்றியது. குளிர்கால இடைவேளைக்குப் பிறகு பள்ளிகள் திறக்கப்படாதோ என்று மாணவிகள் அனைவரும் கவலைப்பட்டனர்.



அதே நேரத்தில், **நியூயார்க் டைம்ஸ்** நாளிதழ், **ஸ்வாட்** மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றி வருவதையும் **மிங்கோரா**வில் உள்ள பெண்கள் பள்ளிகள் மூடப்படுவதையும் பற்றி ஒரு படம் தயாரித்தது. படத்தில் **மலாலா**வும் **அவரது தந்தையும்** இடம்பெற்றிருந்தனர். **பாகிஸ்தான்** ராணுவத்துக்கும் **தலிபான்** போராளிகளுக்கும் இடையே நடக்கும் சண்டையை கேமராக்கள் **மிங்கோரா**வில் ஆறு மாதங்களாக சுற்றித் திரிந்து படமெடுத்தன.



இரவில் குண்டுவெடிப்பு நடந்தது, பெண்கள் பயந்தனர். **மிங்கோரா**வில் உள்ள பல பள்ளிகளைப் போலவே தங்கள் பள்ளியும் அழிக்கப்படும் என்று அவர்கள் பயந்தனர். ஆனால், பாகிஸ்தான் ராணுவம் தலிபான்களுக்கு எதிராக போரிட்டு வருகிறது. ஒருவேளை அவர்கள் வெல்வார்கள் பள்ளியும் மூடப்படாது.

எங்கும் துப்பாக்கிச் சத்தம் கேட்டவாறு இருந்தது. மக்கள் நகரத்தை விட்டு வெளியேற தவித்தனர். பயந்துபோன ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கடும் நெரிசலுடன் வெளியேறும் பேருந்துகள் மற்றும் ட்ரக்குகளின் கூரையின் மீது ஏறி பயணித்தனர்.





மலாலாவும் ஜியாவுதீனும் இரவுதோறும் அவர்களைத் தூங்க விடாமல் செய்த, அவர்கள் வீட்டிற்கு வெளியே வெடித்த குண்டுகளைப் பற்றி பேசினர், இதனால். இனியும் அவரால் அவளை பள்ளிக்கு அழைத்துச் செல்ல முடியாது என்று மலாலா தனது தந்தையிடம் கூறினாள். அவருக்கு வெளியே வர முடியாத அளவுக்கு இது ஆபத்தானதாக இருந்தது. அவள் நீல நிற பள்ளி சீருடையை மிகவும் விரும்பினாள், ஆனால் இப்போது அவளால் அதை அணிய முடியாது. பள்ளிக்குச் சென்ற சில மாணவர்களும் சாதாரண உடையில் இருந்ததால் அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று தலிபான்களுக்குத் தெரியவில்லை.



இறுதியாக ஜனவரி 15 அன்று மூடப்படும், ஆண்கள் பள்ளிகள் மட்டும் திறந்திருக்கும், ஆனால் மாணவிகள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்றனர்.
ஜனவரி 14 அன்று, பள்ளி முடிந்ததும், **மலாலா, மோனிபா** மற்றும் அவளது மற்ற நண்பர்கள் அனைவரோடும் விடைபெற்றுக்கொண்டாள். அடுத்து என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியவில்லை.
படித்தவாறும், தன் சகோதரர்களுடன் சண்டையிட்டபடியும், **பிபிசி** நிருபரிடம் பேசிக்கொண்டும் **மலாலா** நாட்களைக் கழித்தாள்.



அவளுடைய பள்ளி விரைவிலேயே மூடப்படும் என்று தனது முகத்தை மூடிக்கொண்டுஅழாமல் இருக்க முயற்சித்தவாறு அவள் கூறினாள். அவள் டாக்டராக விரும்பினாள். மருத்துவர்கள் பல ஆண்டுகள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் இல்லை என்றால் அவள் எப்படி தன் கனவை நனவாக்க முடியும்?|
ஜனவரி 2009 இல், மலாலா எதற்காக பயந்தாளோ அதையே தலிபான்கள் செய்தார்கள். அனைத்து பெண்கள் பள்ளிகளும்

பிப்ரவரி மாதத்திற்குள், ***ஒரு பாகிஸ்தானிய பள்ளி மாணவியின் நாட்குறிப்பு*** பாகிஸ்தான் முழுவதும் மற்றும் உலகின் பல பகுதிகளிலும் வாசிக்கப்பட்டது. மார்ச் 12 வரை **மலாலா** தொடர்ந்து எழுதினார். **குல் மகாய்** என்ற பெயர் **ஸ்வாட்**டில் நன்கு அறியப்பட்டது. அது யார் என்று மக்கள் ஆச்சரியப்பட்டனர். **மலாலா** யாரிடமும் சொல்லவில்லை.

ஜியாவுதீன் பெண்களுக்கான பள்ளிகளைத் தொடங்கியதால், **ஸ்வாட்** பள்ளத்தாக்கில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி பலர் அவரை நேர்காணல் செய்ய விரும்பினர். அவர்களும் அவரது மகளிடமும் பேச விரும்பினர். பாகிஸ்தானின் **டாக்** ஷோ நிகழ்ச்சியில் **மலாலா** கலந்து கொண்டார். **மிங்கோரா**வில் போர் மற்றும் பள்ளி மூடல்கள் பற்றி தொகுப்பாளர் அவளிடம் கேள்விகளைக் கேட்டார்.



பாகிஸ்தானில் பெரும்பாலான மக்கள் பெண் கல்வியில் நம்பிக்கை வைத்துள்ளனர். **ஸ்வாட்** பள்ளத்தாக்கில் என்ன நடக்கிறது என்று அவர்கள் வருத்தப்பட்டனர். ***மலாலாவின் நாட்குறிப்பை*** பலரும் படித்தனர். தலிபான் தலைவர்கள் கேட்க வேண்டியிருந்தது. பிப்ரவரியில், தாலிபான் மனம் மாறுவது போல் தோன்றியது. பெண்கள் மீண்டும் பள்ளிக்கு செல்லலாம் என்று அறிவித்தனர். **மலாலா**வும் அவளுடைய தோழிகளும் தங்கள் பள்ளிக்குத் திரும்புவதற்கு ஆவலாக இருந்தனர். ஆனால் சில பெண்கள் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டாலும், சண்டை **மிங்கோரா**வில் மோசமாகியது.

நகருக்குள் நடப்பதே ஆபத்தாகிப் போனது. பல மாணவர்கள் வீட்டிலேயே இருந்தனர். மற்றவர்கள் தங்கள் குடும்பத்துடன் நகரத்தை விட்டு வெளியேறினர். மே மாதவாக்கில், **ஜியாவுதீனு**க்கு வேறு வழியில்லை என்று தெரிந்தது. மீண்டும் பள்ளிகளை மூடினார். **மலாலா**வும் அவரது குடும்பத்தினரும் தங்களால் முடிந்ததைக் கட்டிக்கொண்டு மிங்கோராவிலிருந்து அவசர அவசரமாக வெளியேறினர்.



அடுத்த சில மாதங்களை அவர்கள் அருகிலுள்ள பாதுகாப்பான நகரங்களில் உள்ள உறவினர்களின் வீடுகளில் கழித்தனர். **மலாலா** தனது புத்தகங்கள், அவரது நண்பர்கள் மற்றும் குறிப்பாக அவரது பள்ளிக்கு செல்ல இயலாததை நினைத்து மிகவும் சொகமடைந்தாள். இருப்பினும் **மிங்கோரா** மற்றும் வெடிக்கும் குண்டுகளின் சத்தத்தில் இருந்து விலகியதில் அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

ஜூலை 24 அன்று, **யூசுப்சாய்** குடும்பம் இறுதியாக வீடு திரும்பியது. **மிங்கோரா** ஒரு காலத்தில் இருந்தது போலல்லாமல் வெடிப்பிற்கு பிந்தைய குண்டின் கூடு போன்றாகியிருந்தது. போர் முடிந்து, **தலிபான்கள்** மலைப்பகுதிக்குள் நுழைந்தனர். அது நன்றாக இருந்தது. ஆனால் **தலிபான்** போராளிகளுக்கு **மலாலா** யார் என்று தெரியும். அவள் பொதுவெளியில் பேசினாள். அவள் டிதொலைக்காட்சியில் பேசியிருந்தாள். பலர் அவளது ***பிபிசி டைரியைப்*** படித்திருக்கிறார்கள் அல்லது **நியூயார்க் டைம்**ஸின்ஆவணப்படத்தைப் பார்த்திருக்கிறார்கள். மக்கள் அவளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தனர்.


ஆகஸ்ட் மாதம், **மலாலா**வின் பள்ளி ஒருவழியாக மீண்டும் திறக்கப்பட்டது. **மலாலா** தாலிபான்களைப் பற்றி கவலைப்பட முடியாத அளவுக்கு படிப்பில் மும்முரமாக இருந்தாள். அவளுக்கு இப்போது ஒரு புதிய கனவு இருந்தது. அவள் அரசியல்வாதியாக ஆக விரும்பினாள்.

அரசியல்வாதிகள் தங்கள் நாட்டிற்கு நன்மை பயக்கும் சட்டங்களை இயற்றுகிறார்கள். அனைத்திடங்களிலும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பை உறுதி செய்ய **மலாலா** விரும்பினாள்.



அத்தியாயம் 6
"*மலாலா யார்?*"

2012ன் இலையுதிர்காலத்தில், **மிங்கோரா** இயல்பு நிலைக்குத் திரும்பியதாகத் தோன்றியது. **பாகிஸ்தான்** ராணுவம் தலிபான்களை நகரத்திலிரு அழித்துவிட்டது. மீண்டும், தெருக்கள் ஸ்கூட்டர் மற்றும் ரிக்ஷாக்களால் உயிர்ப்பித்தன. குழந்தைகள் வெளியே கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். திரையரங்குகள் மற்றும் முடிதிருத்தும் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. தொலைக்காட்சியில் **மலாலா**வுக்கு பிடித்த சில நிகழ்ச்சிகள் மீண்டும் வந்தன.



பல பள்ளிகள் மீண்டும் கட்டப்பட்டன, மேலும் **மிங்கோரா**வின் மாணவிகள் தங்கள் வகுப்பறைகளுக்குத் திரும்பினர். **மலாலா** பிரபலமானாள். 2011 ஆம் ஆண்டில், ***டச்சு கிட்ஸ் ரைட்ஸ் அறக்கட்டளை*** அவளை சர்வதேச குழந்தைகள் அமைதி பரிசுக்கு பரிந்துரைத்தது. "உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளை பாதிக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்வதில் துணிச்சலான அல்லது குறிப்பிடத்தக்க வகையில் செயல்களிலும் எண்ணங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்திய“ குழந்தைக்கு ஒவ்வொரு ஆண்டும் அப்பரிசு வழங்கப்படுகிறது.



அந்த ஆண்டு அவளுக்கு அப்பரிசு கிடைக்கவில்லை, இருப்பினும் அதுஓர் அங்கீகரிக்கப்பட்ட மரியாதையேயாகும்.



அதே ஆண்டு, பாகிஸ்தான் பிரதமர் தேசிய இளைஞர் அமைதிப் பரிசைத் தொடங்கினார். அமைதிக்காக அதிக பங்களிப்பு செய்த பதினெட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். **மலாலா**வுக்கு அப்பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பரிசின் பெயர் பின்னர் தேசிய **மலாலா** அமைதிப் பரிசு என பெயர் மாற்றப்பட்டது.

அவளுடைய குடும்பம் அவளைப் பற்றி பெருமை கொண்ட அதே வேளையில் அவர்கள் பயந்தார்கள். **மலாலா** பள்ளிக்குச் செல்வது அல்லது வெளியே செல்வது அரிது, **தலிபான்** போராளிகள் வெகுதூரம் செல்லவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அவர்கள் **மிங்கோரா**வைச் சுற்றியுள்ள மலைகளில் எங்கோ இருந்தார்கள். அடுத்து என்ன செய்வார்கள் என்று யாருக்கும் தெரியாது.



அக்டோபர் 9, 2012 அன்று, மலாலா தனது நண்பர்களுடன் சிறிய பள்ளிப் பேருந்தில் ஏறியபோது மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உணர்ந்தாள்.

தேர்வுக்காக கடினமாகப் படித்து, நன்றாக உழைத்துவிட்டதாக நினைத்தாள். அது ஒரு சூடான இலையுதிர் கால நாள் மற்றும் இலைகள் சிவப்பு மற்றும் பழுப்பு மற்றும் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கியிருந்தன.

மலாலாவுக்கு பதினைந்து வயதானது.

மலாலாவின் சிறிய பேருந்து உண்மையில் பேருந்து அல்ல. இது மூன்று வரிசை இருக்கைகள் மற்றும் கூரையுடன் கூடிய ***பிக்கப் டிரக்*** போல இருந்தது. அதன் பக்கங்கள் மூடியிருந்தன, ஆனால் பேருந்தின் பின்புறம் பெரும்பாலும் திறந்தே இருந்தது. பேருந்தில் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் மற்றும் மூன்று ஆசிரியர்கள் கொண்ட கூட்டம் இருந்தது. ***மாலாலா*** தன் தோழி **மோனிபா**வின் அருகில் அமர்ந்திருந்தாள். எல்லோரும் தேர்வுகளைப் பற்றிப் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள். திடீரென பஸ் நின்றது, துப்பாக்கியுடன் ஒரு நபர் பஸ்ஸில் ஏறி பின்புறம் சாய்ந்து நின்றான்.
"யார் ***மலாலா?***" என்று அந்த மனிதன் கேட்டான். சில பெண்கள் ***மலாலா***வைப் பார்த்தார்கள். அந்த மனிதன் அவர்களின் கண்களைப் பார்த்தான். அவர்கள் பார்க்கும் பெண்தான் தான் தேடும் பெண்ணாக இருக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்.
அந்த நபர் துப்பாக்கியை மலாலாவை நோக்கி குறி வைத்து அதன் விசையை இழுத்தான்.



அதன் பிறகு என்ன நடந்தது என்பது **மலாலா**வுக்கு நினைவில்லை. தலையில் சுடப்பட்டது அவள் நினைவில் இல்லை. பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள ராணுவ மருத்துவமனைக்கு ஹெலிகாப்டர் அவளை அழைத்துச் சென்றதோ, அவளது தந்தை வந்ததோ, அவள் உயிரைக் காப்பாற்றிய அறுவை சிகிச்சையோ அவளுக்கு எதுவும் நினைவில் இல்லை. அறுவைசிகிச்சைக்குப் பிறகு அவள் எவ்வளவு உடல்நிலை சரியில்லாமல் இருந்தாள், என்ன நடந்தது என்பதற்கான பதில் அவளுக்குத் தெரியவில்லை. மருத்துவமனையின் வெளியே செய்தியாளர்கள் கூடினர்.

மலாலா இப்போது உலகம் முழுவதும் பிரபலமானார்.

உலகம் முழுவதும் உள்ள செய்தித்தாள்களில் மலாலாவின் படம் வெளியானது. உள்ளூர் தலிபான் ஒருவன் மலாலாவை சுட்டுக் கொன்றான் என்று அந்தக் கட்டுரைகள் கூறின. முதலில் பாகிஸ்தானில், பிறகு எல்லா இடங்களிலும் இந்தச் செய்தி அனைவரையும் வெறுப்படையச் செய்தது. ஒரு இளம்பெண் சுடப்பட்டதை யாராலும் நம்ப முடியவில்லை. ஒரு முஸ்லீம் குழந்தை அப்படி காயப்படுத்தப்பட்டது என்பது யாரும் கேள்விப்படாதது.



மலாலா இப்போது உலகம் முழுவதும் பிரபலமானாள்.

சில செய்திகள் ஏறக்குறைய உண்மையைக் காட்டிலும் அவளை நம்பமுடியாத அளவிற்கு உயர்த்தி சித்தரித்தன.

மாறாக **மலாலா** வழக்கமான பெண். அவளுக்கு **ஜஸ்டின் பீபர்** பாடல்கள் பிடித்திருந்தது. அவளுக்குப் பிடித்த நிறம் இளஞ்சிவப்பு.

அவளும் அதிகாலையில் எழுவதை வெறுத்தாள்.

அவள் தனகுத்தானே விதவிதமான சிகை அலங்காரங்களை செய்து பார்ப்பதில் அதிக நேரம் செலவிட்டாள். அவள் இன்னும் கொஞ்சம் உயராமாக இருந்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அத்தோடுகூட பல்லாயிரக்கணக்கான பிற குழந்தைகளைப் போலவே பள்ளிக்குச் செல்வதை அவள் மிகவும் விரும்பினாள். மாறாக கல்வி கற்பதில் அவள் கொண்டிருந்த ஆர்வத்தினாலேயே அவள் சுடப்பட்டாள்.

மலாலா உயிருடன் இருந்தபோதிலும், மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். மருத்துவமனையில் இருந்த அனைவரும் அவளைப் பற்றி கவலைப்பட்டனர். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. இருப்பினும், அவள் முழுமையாக குணமடைய சிறந்த சிகிச்சை தேவை என்று மருத்துவர்கள் அறிந்திருந்தனர். மலாலா பாகிஸ்தானில் உள்ள ஒரு பெரிய மருத்துவமனைக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டார். அவளுக்கு அதுவும் நினைவில் இல்லை.

மலாலா விரைவில் மீண்டும் ஒருமுறை வேறொரு மருத்துவமனைக்கு மாற்றப்படும் அளவுக்கு உடல் நிலையில் முன்னேற்றம் அடைந்தாள்- இந்த முறை, அது அவளுடையதுப் போன்ற காயங்களில் நிபுணத்துவம் பெற்ற இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையாகும்,

அத்தியாயம் 7

நான் விரும்புவதெல்லாம் கல்வி மட்டுமே

அக்டோபர் 16 அன்று **மலாலா** கண் விழித்தாள். ஒரு வாரத்திற்கு முன்பு, அவள் **மிங்கோரா**வில் ஒரு பள்ளி பேருந்தில் பாடிக்கொண்டிருந்தாள்.



இப்போது அவள் வீட்டிலிருந்து நான்காயிரம் மைல்களுக்கு மேல் தூரத்திலிருக்கும் **இங்கிலாந்தில்** இருந்தாள். இங்கு அவளுக்கு எதுவுமே பரிச்சயமானதாகத் தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்த **மலாலா,** தான் ஒரு மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தாள். மருத்துவர்களும் செவிலியர்களும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தனர்.

அவளால் பேச முடியவில்லை, அவளுக்கு மூச்சு விட மருத்துவர்கள்ஒரு குழாய் பொருத்தியிருந்தனர். ஒருவர் எழுத்துப் பலகையைக் கொண்டு வந்தார். தனது விரலால் சுட்டிக்காட்டி, country மற்றும் father என்ற இரண்டு ஆங்கில வார்த்தைகளை அவளால் சேர்க்க முடிந்தது.
அவள் இங்கிலாந்தில் இருப்பதாகவும் அவளது தந்தை தன் குடும்பத்தாருடன் விரைவில் வரவிருப்பதாகவும் அவளிடம் சொல்லப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு, அவளுக்கு பொருத்தப்பட்டிருந்த சுவாசக் குழாய் அகற்றப்பட்டது. அவளால் பேச முடியுமா என்று மருத்துவர்களால் கூற முடியவில்லை. அனைவரும் காத்திருந்தனர். உருது மொழி பேசும் ஒருவர் வரவழைக்கப்பட்டார். மலாலா எங்கே இருந்தாள் என்ன நடந்தது என்று கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள். அவள் பள்ளி பேருந்தில் இருந்ததை நினைவில் வைத்தாள், அவ்வளவுதான். மற்றது எதுவு அவளுக்கு நினைவில் இல்லை.

அவள் அம்மா வருவார்களா? அவளுடைய சகோதரர்கள்?

அவர்கள் எப்போது
வருவார்கள்?
என்று
கேட்டாள்.



அவளால் பேச முடிந்தது என்று டாக்டர்கள் மகிழ்ந்தனர். ஆனால் மலாலா குணமடைய நீண்ட காலம் பிடிக்கும். அவளால் முகத்தை சரியாக அசைக்க முடியவில்லை. அவளுடைய காது கேட்க்கும் திறன் பாதிக்கப்பட்டிருந்தது. அவளுக்கு மேலும் அறுவை சிகிச்சைகள் தேவைப்படும்.

அவரது குடும்பத்தினர் வந்தபோது, அவர்கள் அருகில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தனர்.



பின்னர், மலாலா இறுதியாக மருத்துவமனையை விட்டு வெளியேற முடிந்ததும், அவர் படிக்கும் புதிய பள்ளிக்கு அருகிலுள்ள பர்மிங்காமில் ஒரு பெரிய வீட்டிற்கு அவர்கள் குடிபெயர்ந்தனர்.
உடல் நலம் பெற, மலாலாவுக்கு பல மாதங்கள் உடற்பயிற்சியும் சிறப்பு உடற்பயிற்சிகளும் தேவைப்பட்டன. அவளுக்கு முதலில் குறுகிய, பின்னர் நீண்ட மற்றும் நெடிய நடை பயிற்சி தேவைப்பட்டது.



சில சமயங்களில், **பர்மிங்காமின்** தெருக்களில் அவள் நடைப்பயிற்சி செல்லும்போது, அவள் சோகமாக உணர்ந்தாள். பாகிஸ்தானில் உள்ள தனது வீட்டோடு இல்லாததை அவள் உணர்ந்தாள். உடைகள், உணவுகள், கடைகள், வானிலை என்று அனைத்தும் மிகவும் வித்தியாசமாக இருந்தது. மக்கள் அன்பானவர்கள், ஆனால் அவர்கள் அவளுடைய நினைவுகளையும் சங்கதிகளையும் பொதுவாக கொண்டிராத புதிய நண்பர்களாக இருந்தனர். அவள் பள்ளிக்கு செல்லாதபோது அல்லது வீட்டுப்பாடம் செய்யாதபோது, அவளின் புதிய கணினியில் **ஸ்கைப்** மூலம் **மோனிபா** மற்றும் அவளுடைய பிற நண்பர்களுடன் பேசினாள்.



மலாலா மீண்டும் பாகிஸ்தானைப் பார்ப்பதைப் பற்றி நினைத்துப் பார்த்தாள்.
குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் கடினமாக இருந்தது. பாகிஸ்தானை விட்டு வெளியேறுவது மிக வேகமாக நடந்தது. அவர்களுக்குப் பிடித்தமான பொருட்களை எடுத்துச் செல்ல நேரமில்லை.

மிங்கோராவில் உள்ள தங்கள் வீட்டில் கூடியிருந்த அனைத்து விருந்தினர்களின் இல்லாமையை அவர்கள் உணர்ந்தனர். மலைகளில் சூரியன் மறைவதை காணும் வாய்ப்பை அவர்கள்
இழந்தனர். அவர்கள் இப்போது பாதுகாப்பாக உணர்ந்தனர், ஆயினும் அவர்கள் தனிமையில் இருந்தனர். தங்கள் தாயகத்தை மீண்டும் எப்போது பார்ப்போம் என்பதில் அனைவரும் நம்பிக்கையற்று இருந்தனர்.



அத்தியாயம் 8
ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு சிறுவனும், ஒவ்வொரு சிறுமியும்

மலாலா சுடப்பட்ட செய்தி உலகம் முழுவதும் வேகமாக பரவியது. எங்கு பார்த்தாலும் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த இளம்பெண் பள்ளிக்கு செல்ல விரும்பினாள். அவள் ஒரு நாட்குறிப்பு எழுதியிருந்தாள். அவள் வெளிப்படையாக பேசியிருந்தாள். அவள் கல்வி கற்க உதவுமாறு உலகத்திடம் வேண்டினாள். இதற்காக, அவள் தனது வாழ்க்கையை கிட்டத்தட்ட இழந்தாள்.

ஒரு மாதம் கழித்து, நவம்பர் 2012 இல், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் **பான் கீ மூன்**, மலாலாவின் பதினாறாவது பிறந்த நாளான **ஜூலை 12, 2013** ஐ ஐக்கிய நாடுகள் சபையில் **மலாலா** தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார்



மலாலாவின் பதினாறாவது பிறந்தநாள் ஐக்கிய நாடுகள் சபையில் **மலாலா** தினமாக கொண்டாடப்பட்டது. நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகளின் இளைஞர் பேரவையில் பேச **மலாலா**வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதிலுமிருந்து இளைஞர்கள் ஐ.நா தூதர்களைச் சந்திக்கிறார்கள். அவர்கள் தங்கள் நாடுகளில் மிக இளம் வயதிலேயே கடினமான வேலைகளை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள குழந்தைகளுக்கும், மிகவும் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ள சிறுமிகளுக்கும் உதவுவதற்கு என்ன செய்யலாம் என்று விவாதிக்கிறார்கள். இனி பள்ளிக்கு செல்ல முடியாது என்று கூறப்பட்ட **மலாலா** போன்ற குழந்தைகளைப் பற்றியும் ஐ.நா. தூதர்கள் தெரிந்துகொள்கிறார்கள்.

2013 கோடைகாலவாக்கில், **மலாலா** அமெரிக்காவிற்குப் பயணம் செய்யும் அளவுக்கு நன்றாக தேறிவிட்டாள். அவள் காயங்களிலிருந்து மீண்டு வர ஒன்பது மாதங்கள் ஆகியது. அவள் முகத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது.

அவளுடைய செவித்திறனை மேம்படுத்துவதற்கான ஓர் அறுவை சிகிச்சையும் வெற்றிகரமாக நடந்தது. துப்பாக்கி ஏந்திய ஒரு பயங்கரவாதி தன்னைத் தடுக்கமுடியாது என்பதை உலகுக்குக் காட்ட **மலாலா** தயாராக இருந்தாள். அவள் தொடர்ந்து பேசினாள்.

THE UNITED NATIONS

1945 ஆம் ஆண்டில், இரண்டாம் உலகப் போரின் முடிவில், அமைதியைக் காக்க உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்ற ஓர் இடம் தங்களுக்குத் தேவை என்று தீர்மானித்தன. அதுதான் ஐக்கிய நாட்டு சபையின் நோக்கமாக இருந்தது. ஐக்கிய நாட்டு சபையின் கட்டிடங்கள் நியூயார்க் நகரத்தில் அமைய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் உயரமான கண்ணாடி முகப்புள்ள செயலகக் கட்டிடமும் அரை கோள வடிவ கூரையுடன் கூடிய ஜெனரல் அசெம்பிளி கட்டிடமும் மிகவும் பிரபலமானது. 2014 ஆம் ஆண்டுவாக்கில், 193 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன. பொதுச் சபை மண்டபத்தில் பிரதிநிதிகள் கூடுகிறார்கள். அவர்கள் பல உலகப் பிரச்சனைகளான —குழந்தைகளின் உரிமைகள், வறுமை, போரில் ஈடுபட்டுள்ள நாடுகள் —ஆகிவற்றை கருத்தில் கொள்கிறார்கள்.


பிரதிநிதிகளின் பேச்சுக்களை கவனத்தில்கொண்டுஅவர்கள் வாக்களிக்கிறார்கள். ஐக்கிய நாடுகளின் தலைமைச் செயலாளர் பொதுச்செயலாளர் என்று அழைக்கப்படுகிறார்.





ஜூலை 12, 2013 அன்று, மலாலா தனது குடும்பத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு அன்றையதின கூட்டத்திற்காக வந்தாள். தொடக்க விழாவின் போது, அனைவரும் அவருக்கு "பிறந்தநாள் வாழ்த்துக்கள்" பாடினர்.


உலகம் முழுவதிலுமிருந்து வந்த பிரதிநிதிகள் மற்றும் கிட்டத்தட்ட ஆயிரம் இளைஞர்களால் அந்த அரங்கம் நிரம்பி வழிந்தது. அவள் மேடைக்கு செல்லும்போது, அவர்கள் எழுந்து நின்று கைதட்டி உற்சாகமூட்டினர்.



மலாலா பேச ஆரம்பித்தாள். அவள் ஆங்கிலத்தில் பேசினாள். அந்த அரங்கத்தில் இருந்த அனைவருக்கும் புரியும்வகையில். அவளது பேச்சு ஹெட்ஃபோன்கள் மூலம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. “துப்பாக்கிகள் எங்களை அமைதிப்படுத்தும் என்று அவர்கள் நினைத்தார்கள், ஆனால் அவர்கள் தோல்வியடைந்தார்கள்," என்றாள் அவள். மேலும் “அந்த மௌனத்திலிருந்து ஆயிரக்கணக்கான குரல்கள் எழுந்தன. பயங்கரவாதிகள் எனது நோக்கங்களை மாற்றி, எனது லட்சியங்களை தடுத்துவிடலாம் என்று நினைத்தார்கள், ஆனால், பலவீனம், பயம், நம்பிக்கையின்மை ஆகியவை மறைந்து. என் வாழ்க்கையில் வலிமை, ஆற்றல் மற்றும் தைரியம் பிறந்துள்ளது.



ஒன்பது மாதங்களுக்கு முன்பு தனக்கு என்ன நடந்தது என்று மலாலா பேசினாள். . தன்னைச் சுட்டவனை அவள் வெறுக்கவில்லை. உண்மையில், அவள் துப்பாக்கி வைத்திருந்தால் கூட அவனைச் சுட்டிருக்கமாட்டாள். அவள் கவனம் செலுத்த விரும்பியது அமைதிகான தேவையின் மீதே. தங்கள் உரிமைகளுக்காக அமைதியாகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், மகாத்மா காந்தி மற்றும் அன்னை தெரசா ஆகியோரை அவள் குறிப்பிட்டாள்.



மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்

“மலாலா தினம் என்பது என்னுடைய நாள் அல்ல மாறாக இன்று தங்கள் உரிமைகளுக்காக குரல் எழுப்பிய ஒவ்வொரு பெண், ஒவ்வொரு சிறுவன் மற்றும் ஒவ்வொரு சிறுமியின் நாள்” என்றாள் மலாலா.

MAHATMA GANDHI (1869-1948)

மகாத்மா காந்தி ஒரு மாபெரும் தலைவராவார். இந்திய மக்களுக்கு உதவும் முயற்சியிலேயே அவர் தனது வாழ்க்கையைக் கழித்தார். இந்தியா, அந்த நேரத்தில் கிரேட்-பிரிட்டனால் ஆளப்பட்டு வந்தது
. பலர் அதை மாற்ற விரும்பினர். இந்தியா தன்னைத் தானே ஆள வேண்டும் என்று அவர்கள் நம்பினர். இந்தியா கிரேட்-பிரிட்டனுடன் போரில் ஈடுபட வேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் காந்தி போரை நம்பவில்லை. அவர் வன்முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை.

பேச்சு வார்த்தை போல, அமைதியான வழிகளில் மாற்றம் வர வேண்டும் என்று அவர் உணர்ந்தார். அவர் அமைதியான நடை பயணங்களை மேற்கொண்டார். மேலும் மேலும் மக்கள் சேர்ந்தனர்.



அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை. அவர்கள் பிரிட்டிஷ் பொருட்களை வாங்குவதை நிறுத்தினர்.

1947 இல், இந்தியா ஒரு சுதந்திர நாடாக மாறியது. மக்கள் தெருக்களில் ஆரவாரம் செய்தனர். அவர்கள் தங்கள் தலைவரான காந்திக்கு ஆரவாரம் செய்தனர். அவர்கள் அவரை தேசத்தின் தந்தை என்று அழைத்தனர்

அவளது தந்தை முதல் வரிசையில் உட்கார்ந்து பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்து இருக்கையில், அவளின் அம்மா, தனது மகளின் பேச்சைக் கேட்டு, அவரது கண்களில் இருந்து கண்ணீரைத் துடைத்துக் க்கொண்டார். அவரது கணவரைப் போலவே, **டோர் பெக்காய்** எப்போதும் பெண் கல்வியில் நம்பிக்கைக் கொண்டிருந்தார்.



ஆனால் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளுக்காக **மலாலா**வின் போராட்டம் அவரையும் மாற்றியது. **டோர் பெகாய்** இப்போது பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். அவர் ஆங்கிலம் பேச கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார். **மலாலா** வீட்டுப் பாடங்களைச் செய்வதில் அவருக்கு உதவி செய்தாள்.



அன்னை தெரசா (1910 1997)

அன்னை தெரசா ஒரு ரோமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஆவார், அவர் இந்தியாவில் தேவைப்படும் மக்களுக்கு உதவ தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.



பெரும்பாலானவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். சிலர் நடக்க முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருந்தனர். அவர் கல்கத்தா நகரில் (தற்போது கொல்கத்தா என்று அழைக்கப்படுகிறது) ஒரு பள்ளியைத் தொடங்கி கற்பித்தார். அவர் ஒரு மருத்துவமனையைத் துவங்கி பணம் செலுத்த முடியாத மக்களுக்கு சிகிச்சை அளித்தார். அவர் பசியுடன் இருந்த அனைவர்களுக்கு உணவளித்தார்,

அவ்வப்போது தான் பட்டினி கிடந்தும் கூட அவர்கள் சாப்பிட. உணவளித்தார். இந்தியா முழுவதிலும் இருந்து மக்கள் வந்திருந்தனர். யாரும் ஒருபோதும் திருப்பி அனுப்பப்படவில்லை. 1979 இல், அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அன்று இரவு, உலகம் முழுவதிலும் உள்ள செய்தி நிகழ்ச்சிகள் மலாலாவுடைய உரையின் காணொளிக் காட்சியினை காட்டின. காந்தி, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் மற்றும் நெல்சன் மண்டேலாவைப் போலவே, மலாலாவும் மாற்றத்தைக் கொண்டுவர அமைதியான வழியில் இயக்கத்தைத் தொடங்கினார். "கல்வி மட்டுமே தீர்வு," என்று அவர் கூறினார்.

"கல்வியே முதன்மை."



நெல்சன் மண்டேலா

அத்தியாயம் 9
புத்தகத்துடன் ஒரு பெண்

மலாலாவின் வாழ்க்கை மிக வேகமாக மாறிவிட்டிருந்தது. அவள் பதினொரு வயதில், மிங்கோரா நகரில் என்ன நடந்தது என்பதைப் பற்றி உள்ளூர் செய்தியாளர்களிடம் பேசினாள்

அவரது பதினாறாவது பிறந்தநாளில், ஐக்கிய நாடுகள் சபையில் அவர் பேசியதை எல்லா இடங்களிலும் மக்கள் கேட்டார்கள். மூன்று மாதங்களுக்குப் பிறகு, சிறந்த விற்பனையான அவளது புத்தகம், நான். மலாலா வெளியிடப்பட்டது, அதன் பிரதிகள் உலகம் முழுவதும் விற்கப்பட்டன.



குழந்தைகளுக்கான சுருக்கப்பட்ட பதிப்பு அடுத்த ஆண்டு வெளியிடப்பட்டது.

அக்டோபர் 10, 2014 அன்று, நோபல் குழு அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர்களை அறிவித்தது.

உலகை சிறந்த இடமாக மாற்ற ஏதாவது செய்யும் நபர்களுக்கு இந்த பரிசு வழங்கப்படுகிறது. 2014ஆம் ஆண்டில், அமைதிக்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த பதினேழு வயது மலாலா யூசுப்சாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.





கைலாஷ் சத்யார்த்தி

மற்றொரு வெற்றியாளர் கைலாஷ் சத்யார்த்தி (KAY-lash sah-tee-AR-tee), அறுபது வயது, இந்தியர் ஆவார். "குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஒடுக்குவதற்கு எதிரான போராட்டத்திற்காகவும், அனைத்து குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும்" கமிட்டி அவர்களை கவுரவித்தது.

நோபல் பரிசு

ஆல்ஃப்ரெட் நோபல் ஒரு ஸ்வீடிஷ் வேதியியலாளரும் கண்டுபிடிப்பாளரும் ஆவார்.. அவர் 1833 இல் பிறந்து 1896 இல் மறைந்தார். அவர் நாடகங்களையும் கவிதைகளையும் எழுதினார். அவர் டைனமைட்டையும் கண்டுபிடித்து மிகவும் பணக்காரர் ஆனார்.




முக்கிய வழிகளில் உலகை மாற்ற உதவிய நபர்களுக்கு தனது பணத்தின் பெரும்பகுதி செல்வதாக அவரது உயிலில் கூறியிருந்தார் அவர். அமைதிக்கான பரிசானது அமைதியை நிலைநாட்ட யாரெல்லாம் அதிக முயற்சி எடுத்தார்களோ அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார். நோபல் பரிசுகள் இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதி ஆகிய துறைகளில் சிறந்த சாதனை படைத்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. அந்த பரிசுகள் ஆல்ஃபிரட் நோபலின் நினைவு தினமான டிசம்பர் 10ஆம் தேதி அன்று வழங்கப்படுகின்றன.

நோபல் பரிசை வென்றவர்களிலேயே மிகவும் இளையவர் **மலாலா**. அவளது ஹீரோக்கள் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், அன்னை தெரசா மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோர் அவருக்கு முன்பே அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர்கள்.
மலாலா பர்மிங்காமில் வேதியியல் வகுப்பில் இருந்தபோது, பரிசு வென்றதைக் கேள்விப்பட்டார். காலை 10:15 மணிக்கு ஒரு ஆசிரியர் அவளது வகுப்பறைக்குள் வந்து தகவல் சொன்னார்.



அப்படியானால் **மலாலா** என்ன செய்தாள்?
அவள் பள்ளியில் தங்கினாள். அவள் இயற்பியல் மற்றும் ஆங்கில வகுப்புகளுக்குச் சென்றாள். இது ஒரு சாதாரண நாளாக இருக்க வேண்டும் என்று அவள் முடிவு செய்தாள். ஆனால் நிச்சயமாக, இது ஒரு சாதாரண நாளல்ல! **கைலாஷ் சத்யார்த்தி**யுடன் பரிசை பகிர்ந்து கொண்டதில் **மலாலா** மகிழ்ச்சி அடைந்தாள். அவர் இந்தியாவைச் சேர்ந்தவர், குழந்தைகள் அடிமைகளாக விற்கப்படுவதைத் தடுக்க நிறைய பாடுபட்டுள்ளார், **மலாலா**வின் தாயகமான பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே கடந்த காலங்களில் பதற்றம் இருந்தது. ஒருவேளை அவர்கள் தங்கள் நாடுகளுக் இடையே நட்புறவை உருவாக்குவதற்கு ஒன்றாக இணைந்து செயல்படலாம். அவர்கள் வெற்றி பெற்றதைக் கேள்விப்பட்ட **மலாலா**, “ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்,. ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவர். ஒருவர் இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டவர். ஒருவர் இஸ்லாத்தை உறுதியாக நம்புகின்றவர். மேலும் இது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான மக்களுக்கு ஒரு செய்தியை அளிக்கிறது, மற்றும் பல்வேறு மதங்களுக்கு இடையே அன்பான மக்களுக்கு ஒரு செய்தியை அளிக்கிறது. மற்றும் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆதரிக்கிறோம். தோலின் நிறம் என்ன, எந்த மொழி பேசுகிறோம்,

எந்த மதத்தை நம்புகிறோம் என்பது முக்கியமல்ல. நாம் அனைவரும் ஒருவரையொருவர் மனிதர்களாகவே கருத வேண்டும்.” என்றாள் **மலாலா**.



டிசம்பர் 10, 2014 அன்று, நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொண்ட **மலாலாவும்** **கைலாஷும்** ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர்.

நோர்வேயின் ஒஸ்லோவில் விழா: **மலாலா** தனது உரையில், “இந்த விருது எனக்கு மட்டுமானதல்ல. கல்வியை விரும்பும் மறக்கப்பட்ட குழந்தைகளுக்கும், இது, அமைதியை விரும்பும் அச்சமடைந்த குழந்தைகளுக்கும். இது மாற்றத்தை விரும்பும் குரலற்ற குழந்தைகளுக்குமானது.” என்று கூறினாள்.



கைலாஷ் சத்யார்த்தி

கைலாஷ் சத்யார்த்தி இந்தியாவின் மத்தியப் பகுதியிலுள்ள **விதிஷா** நகரில் பிறந்தார். அவர் சிறுவனாக இருந்தபோது, பள்ளிக்குச் செல்லாத பல குழந்தைகளைப் பார்த்திருக்கிறார். அவர்களது குடும்பங்கள் மிகவும் ஏழ்மையில் இருந்தன, மற்றும் குழந்தைகள் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். சிலர் தொழிற்சாலைகளில் கூடுதலான நேரம் வேலை செய்தனர். மற்றவர்கள் தொலைதூர நாடுகளில் வேலை செய்ய அனுப்பப்பட்டனர். **மலாலா**வைப் போலவே, **கைலாஷும்** பள்ளியை நேசித்தார், மேலும் அவர்களால் கல்வி கற்க முடியாது என்பதை அவரால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அவரும் ஒரு நண்பரும் சேர்ந்து பழைய புத்தகங்களைத் தருமாறு மக்களை வேண்டினர். ஒரே நாளில், அவர்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் புத்தகங்களைத் திரட்டினர்., பணக்கார மற்றும் ஏழைக் குழந்தைகள் கடன் வாங்கிப் படிப்பதற்கு அவற்றை புத்தக வங்கியில் சேர்த்தனர். **கைலாஷ்** பெரியவரான பின், வேலைக்குத் தள்ளப்பட்ட இளம் குழந்தைகளை மீட்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் பல ஆயிரம் குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளார். 1998 ஆம் ஆண்டில், உலகெங்கிலும் பள்ளிக்குச் செல்வதற்குப் பதிலாக வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்த குழந்தைகளின் மீது கவனத்தை ஈர்க்க அவர் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்தார்/ .103 நாடுகளில் ஏழு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதில் பங்கேற்றனர்





Now Malala’s name and face with her shy, beautiful smile are known around the world. She never planned on being famous. There was only one thing that Malala really wanted. It was something that most children take for granted. It was something worth fighting for: the right to go to school.

அனைத்து நோபல் பரிசு வென்றவர்களைப் போலவே மலாலாவும் தங்கப் பதக்கமும் பரிசுத் தொகையும் பெற்றார். அவரது பணத்தின் ஒரு பகுதி - அரை மில்லியன் டாலர்களுக்கு மேல் - மலாலா நிதியத்திற்கு கொடுக்கப்பட்டது, இது உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு கல்வியைப் பெற உதவுகிறது. மலாலா நிதி பள்ளிகளை கட்டவும் பழுது பார்க்கவும் பணம் திரட்டப்படுகிறது. வேலை செய்ய அல்லது திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட இளம் பெண்கள் கற்கவும் படிக்கவும் பாதுகாப்பான இடங்கள் இருப்பதை இது உறுதி செய்கிறது. இது பெண்கள் பள்ளிக்குச் செல்வதற்கான உரிமைக்காக குரல் கொடுக்க உதவுகிறது.



மலாலா யூசப்சாய் வாழ்க்கை நிகழ்வுகளின் காலவரிசை

1997	---	***மலாலா யூசுப்சாய்*** பாகிஸ்தானின் மிங்கோராவில் ஜூலை 12 அன்று பிறந்தார்.
2008	---	***மிங்கோரா***விலுள்ள பெண்கள் பள்ளிகள் மூடப்படுவது குறித்து உள்ளூர் செய்தியாளர்களிடம் பேசுகிறார்
2009	---	***மிங்கோரா பெண்கள் பள்ளி தலிபான்களால் மூடப்பட்டது*** என்ற **பி.பி.சி.**யின் உருது இணையதளத்தில் "***பாகிஸ்தானிய பள்ளி மாணவியின் டைரி***" என்ற வலைப்பதிவு வெளியிடப்பட்டது.
2011	---	பாகிஸ்தானின் தேசிய இளைஞர் அமைதிப் பரிசு வழங்கப்பட்டது
2012	---	அக்டோபர் 9 அன்று தலிபான்களால் சுடப்பட்டார். குடும்பம் இங்கிலாந்தின் **பர்மிங்காமுக்கு** குடிபெயர்கிறது. ***மலாலா*** நிதி தொடங்கப்பட்டது
2013	---	டச்சு நாட்டு குழந்தைகள் உரிமைகள் சர்வதேச குழந்தைகள் அமைதிக்கான பரிசு வழங்கப்பட்டது. தனது பதினாறாவது பிறந்தநாளான ஜூலை 12 அன்று ஐக்கிய நாடுகளின் இளைஞர் பேரவையில் உரையாற்றுகிறார். ஐக்கிய நாடுகள் சபையில் இன்று ***மலாலா*** தினம் நான் ***மலாலா*** (I Am Malala) என்ற சுயசரிதை வெளியிடப்பட்டது.
2014	---	இந்தியாவின் ***கைலாஷ் சர்யார்த்தி***யுடன் அமைதிக்கான நோபல் பரிசு ***டிசம்பர் மாதம் 10ஆம் தேதி*** வழங்கப்பட்டது. ***ஐ ஆம் மாலா*** புத்தகத்தின் இளம் வாசகர்கள் பதிப்பு வெளியிடப்பட்டது

உலக நிகழ்வுகளின் காலவரிசை

பாரிஸ் கார் விபத்தில் **இளவரசி டயானா** கொல்லப்பட்டார் ---	1997
கூகிள் நிறுவனம் தொடங்கப்பட்டது ---	1998
2000 தேர்தலுக்குப் பின்னர், **அமெரிக்காவின்** நாற்பத்து மூன்றாவது ஜனாதிபதி **ஜார்ஜ் டபிள்யூ, புஷ்** என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. ---	2000
அல்-கய்தா பயங்கரவாதிகள் செப்டம்பர் 11 அன்று நான்கு விமானங்களைக் கடத்தி **உலக வர்த்தக மையம்** மற்றும் **பென்டகன்** மீது தாக்குதல்களை நடத்தினர். ---	2001
ஈராக் போர் தொடங்கியது ---	2008
ஜனாதிபதி **ஜோர்ஜ் டபுள்யூ புஷ்ஷின்** இரண்டாவது பதவிக்காலம் தொடங்கியது. ---	2005
ஆப்பிள் நிறுவனம் **ஐ-போனை** வெளியிட்டது ---	2007
பராக் ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்ட **முதல் ஆப்பிரிக்க அமெரிக்கர்** : **அமெரிக்காவின் ஜனாதிபதியானார்** ---	2008
செப்டம்பர் 11 தாக்குதல்களின் சூத்திரதாரி **ஒசாமா பின் லேடன் பாக்கிஸ்தானில் அமெரிக்க** சிறப்புப் படையால் கொல்லப்பட்டார் ---	2011
அமெரிக்க ஜனாதிபதி **பாரக் ஒபாமா** மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ---	2012
போப்பாண்டவர் பதினாறாம் **பெனடிக்ட்** தனது இராஜினாமாவை அறிவிக்கிறார் ---	2013
பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள ஒரு பள்ளியில் துப்பாக்கியுடன் தலிபான்கள் அத்துமீறி நுழைந்து குறைந்தது 141 பேரைக் கொன்றனர், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள். ---	2014